*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*21 07 2026* *TUESDAY* *6.30 PM*
*மாநிலச்செய்திகள்*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

***1)*** ***தூத்துக்குடி முத்துக்களுக்கு புவிசார் குறியீடு வழங்குவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாத் மக்களவையில் தெரிவித்துள்ளார்.***

***2)*** ***தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 5-ஆம் தேதி தொடங்குகிறது.***

***3)*** ***வேளாண் கூட்டுறவு சங்கங்களை கணினி மாயமாக்குவதன் மூலம், விவசாயிகளுக்கு சேவைகளை விரைந்து வழங்க முடியும் என்று மாநில அமைச்சர் திரு வினோத் தெரிவித்துள்ளார்.***

***4)*** ***மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான சுய விவரங்களை இம்மாதம் 31-ஆம் தேதிக்குள் இணையதளத்தில் பதிவிடுமாறு தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநர் திரு சுந்தரேஷ் பாபு கேட்டுக்கொண்டுள்ளார்.***

***5)*** ***தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.***

***-- இனி விரிவான செய்திகள் –***

***<<<<<<>>>>>***

***தூத்துக்குடி கடல் பகுதியில் எடுக்கப்படும் முத்துக்களுக்கு புவிசார் குறியீடு வழங்குவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருவதாக வர்த்தக மற்றும் தொழில்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.***

***இதுதொடர்பாக, மக்களவையில், திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதிலில், தூத்துக்குடி முத்து உற்பத்தியாளர்கள் சங்கம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அளித்த கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், புவிசார் குறியீடு பதிவு அலுவலகத்தின் பதிலுக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.***

***அது கிடைத்தவுடன் உரிய விதிமுறைகளின்படி தூத்துக்குடி முத்துக்கு புவிசார் குறியீடு வழங்கப்படும் என்றும் திரு ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.***

***மேலும், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்திலிருந்து புவிசார் குறியீடு கோரி பல்வேறு வேளாண், உணவுப்பொருள் மற்றும் கைவினைப் பொருட்களுக்கு அளிக்கப்பட்டிருந்த கோரிக்கைகள் குறித்த பட்டியலை வெளியிட்ட அமைச்சர், அந்த விண்ணப்பங்களும் பரிசீலனையில் இருப்பதாக தெரிவித்துள்ளார்.***

***<<<<<<>>>>>***

***தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 5-ஆம் தேதி தொடங்க உள்ளதாக பேரவைத் தலைவர் திரு. JCD பிரபாகர் அறிவித்துள்ளார்.***

***சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2026-27ஆம் நிதியாண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை அன்றைய தினமே தாக்கல் செய்யப்படும் என்றார்.***

***6-ஆம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கை பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.***

***நிதிநிலை அறிக்கை தாக்கலுக்கு பின்னர் அலுவல் ஆய்வுக்குழு கூடி இந்த கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றார்.***

*மானியக்கோரிக்கை தொடர்பான விவாதங்கள் நடைபெறுவது குறித்தும் அலுவல் ஆய்வுக்குழு முடிவு செய்யும் என்றார்.*
*சட்டப்பேரவை நிகழ்வுகள் முழுமையாக நேரலை செய்யப்படும் என்றும், திரு J C D பிரபாகர் கூறினார்.*

*<<<<<<>>>>>*

*வேளாண் கூட்டுறவு சங்கங்களை கணினி மாயமாக்குவதன் மூலம், விவசாயிகளுக்கு சேவைகளை விரைந்து வழங்க முடியும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு வினோத் தெரிவித்துள்ளர்.*
*சென்னையில் நடைபெற்ற நபார்டு வங்கியின் 45-ஆவது நிறுவன தின விழாவில் இன்று உரையாற்றிய அவர், விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குவதுடன் கல்வி, நீர் பாதுகாப்பு, பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற விவசாய முறைகளுக்கு அதிக முதலீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.*
*விவசாய புத்தொழில்கள் மற்றும் இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்க நபார்டு முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.*
*துல்லிய பண்ணைமுறை மற்றும் டிஜிட்டல் தளங்களை பயன்படுத்துவதன் மூலம், வேளாண் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்கவும், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் முடியும் என்று அவர் தெரிவித்தார்.*
*இந்நிகழ்ச்சியில் பேசிய தமிழக கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் கூடுதல் தலைமைச் செயலர் திருமதி அமுதா, கூட்டுறவுத் துறையில் பெண் உறுப்பினர்கள் தலைமை பொறுப்பினை ஏற்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.*

*<<<<<<>>>>>*

*தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் இவ்வாண்டு ஹஜ் பயணம் செல்ல விரும்புவோர் ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் இம்மாதம் 24-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.*
*இம்மாதம் 30-ஆம் தேதியன்று கணினி வழி குலுக்கல் முறையில் புனித பயணம் மேற்கொள்பவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*
*இந்த தேர்வு இணையதளத்தில் நேரலையாக இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
*தற்காலிகமாக தேர்வு பெற்றவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் இந்திய ஹஜ் குழு இணையதளத்தில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>*

*மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான சுய விவரங்களை இம்மாதம் 31-ஆம் தேதிக்குள் இணையதளத்தில் பதிவிடுமாறு தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநர் திரு சுந்தரேஷ் பாபு கேட்டுக்கொண்டுள்ளார்.*
*தேனி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கணக்கெடுப்புப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட அவர், செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.*

*(Sound Byte – சுந்தரேஷ் பாபு - 58 Sec. )*

*<<<<<<>>>>>*

*தமிழ்நாடு அரசின் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில், சென்னையில் தொழில்முனைவோருக்கான மீடியா ட்ரோன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.*
*இம்மாதம் 27-ஆம் தேதிமுதல், 29-ஆம் தேதி வரை அளிக்கப்படும் இப்பயிற்சியில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் editn.in என்ற இணையதளம் மூலமாகவோ அல்லது சென்னை கிண்டி சிட்கோ தொழிற்பேட்டை, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தை நேரிலோ அல்லது கைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.*

*கைபேசி எண், 9 3 6 0 2 2 1 2 8 0.*

*<<<<<<>>>>>*

*பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தின்கீழ், திருப்பத்தூர் மாவட்டத்தில் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.*

*வாணியம்பாடி ஐ டி ஐ-யில் இத்திட்டத்தின்கீழ் நடைபெற்ற முகாமில் பயிற்சி அளித்த அலுவலர் திரு அருண்குமார், மாணவர்கள் உதவித்தொகையுடன் வேலைவாய்ப்பை சிரமமின்றி பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(Sound Byte – அருண்குமார் – 35 Sec.)*

*ரோபோட்டிக்ஸ் பிரிவில் பயிற்சி பெற்ற மாணவிகள், இத்திட்டத்தை கொண்டுவந்த மத்திய அரசுக்கு தங்களது நன்றியை தெரிவித்தனர்.*

*(Sound Byte – மாணவிகள் - 32 Sec.)*

*<<<<<<>>>>>*

*தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.*

*<<<<<<>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

*மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் தலைமையில் பாடத்திட்ட உயர்மட்ட வல்லுநர் குழு மற்றும் வடிவமைப்புக் குழு கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது.*

*------------*

*நீலகிரியில் நடைபெற்ற விழாவில் மாநில கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திருமதி கமலி கலந்துகொண்டு, புதிய மின்னணு குடும்ப அட்டைகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.*

*------------------*

*நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் மாநில பால் வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலக்ஷ்மி 3 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்ட பணிகளை இன்று திறந்துவைத்தார்.*

*-----------------*

*திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆயிரத்து 60 பேருக்கு புதிய குடும்ப அட்டைகளை மாவட்ட ஆட்சியர் திரு. ரவிக்குமார் இன்று வழங்கினார்.*

*------------*

*வேலூர் அடுத்த தொரப்பாடி ஏரியை மாவட்ட ஆட்சித் தலைவர் லீலா அலெக்ஸ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*-------------*

*அரியலூர் மாவட்டத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.*

*<<<<<<END>>>>>*